சம் உள்ள யதார்த்தப் படங்கள், அதாவது புதிய கதைப்போக்குள்ளப் படங்களை, புதிய அறிமுக நடிகர்கள் மட்டுமே மூன்றாம் நிலையிலிருந்து வழங்கி வந்துள்ளனர்; இன்றுவரை வழங்கிக் கொண்டும் இருக்கின்றனர். இந்த நிலை தமிழ் சினிமாவில் சிற்சில மாற்றங்களுடன் தொடர்ந்து வருவது ஆய்வுக்குரிய விஷயமாகும்.

புதிய கதைப்போக்கு கொண்ட யதார்த்தப் படங்களே, யதார்த்த மனிதர்களை, புதியவர்களை, ஒப்பனையற்ற நிஜ மனிதர்களை தமிழ்த் திரைக்கு வழங்குகிறது. இவ்வாறான படங்களின் வருகை அவ்வப்போது, தமிழ் சினிமாவில் நிகழ்ந்தாலும், இம்மாதிரியான படங்களின் அதிகரிப்பு என்பது நமது தமிழ் சினிமாவில் இரண்டு கால கட்டங்களில் நிகழ்ந்தது -நிகழ்கிறது. ஒன்று தொலைக்காட்சிப் பெட்டி வந்து சதா சீரியல், பாட்டு, சினிமா என்று ஒலி -ஒளிபரப்பி மக்கள் ரசனையில் சிறிதளவு மாற்றத்தை உருவாக்கியதால், அதனை ஈடு செய்ய புதிய கதைப்போக்கு சினிமாவிற்கு தேவைப்பட்டது. அடுத்து 90-களின் காலகட்டத்தில் உலகமயம் ஏற்படுத்திய தாக்கம்! இன்டர்நெட் மூலம் விரல்நுனியில் உலக விஷயங்கள், 24 மணி நேர சாட்டிலைட் சேனல்களின் வருகை, உலக - ஹாலிவுட் -ஆங்கிலப் படங்கள் நேரடியாக நம்மூர் தியேட்டர்கள், தொலைக்காட்சிகளில், சிடி-டி.வி.டிக்களில் நம்மூர் பாஷை பேசிக் கொண்டு வந்தது! டிஜிட்டல் கேமராக்கள், செல்ஃபோன்கள் வருகை இதுபோன்ற மாற்றங்கள் ஒருபுறம்! மக்களின் வாழ்க்கை நெருக்கடிகள் மறுபுறம்! இவைகள் மக்களின் பொழுதுபோக்கு ரசனையில் கனத்த மாறுதலை உருவாக்கியிருப்பது மறுக்க முடியாத நிஜம். மக்களின் இந்த ரசனை மாற்றத்தினை உணர்ந்த இயக்குனர்களால் தற்போது யதார்த்தத்துடன் கூடிய புதிய கதைப்போக்குள்ள படங்களின் அதிகரிப்பு நிகழ்ந்து வருகிறது.

யதார்த்தப் படங்களுக்கு இமேஜ் சிறிதும் இல்லாத புதியவர்களே பொருத்தமான நடிகர்களாகப் பொருந்திப் போகிறார்கள். அதனை ஒரு திரைப்படத்திற்கு மூளையாகச் செயல்படும் இயக்குனரே ஏற்று நடிக்கும்போது கதாபாத்திரத்தின் குணச்சித்திரம் மெருகேற்றப்பட்டு, வெளிப்பட்டு எளிதாகிறது. சமீபத்தில் வெளிவந்து வெற்றி பெற்ற 'மாயாண்டி குடும்பத்தார்' படத்திலும் அது நன்கு வெளிப்பட்டுள்ளது. யாரோ ஒரு புதியவருக்காக உருவாக்கப்படும் கதாபாத்திரத்தின் குணச்சித்திர விவரிப்பை தனது உடல்மொழி உணர்வு -உடலமைப்புக்கு தகுந்தாற்போல் வடிவமைப்பது ஒரு படைப்பாளிக்கு எளிதாக அமைகிறது. மேலும் இயக்குனர்களை விட நடிகருக்கே நமது சமூகத்தில் அனைத்து மட்டங்களிலும் மதிப்பு கிடைக்கிறது. இச்சூழலை உணர்ந்ததால்தான் இயக்குனர்களில் சிலர் நடிகராக அரிதாரம் பூசிக்கொள்கிறார்கள். தினை விதைப்பவர்கள் அவர்கள், தினை அறுக்க ஆசைப்படுவதில் தவறேதுமில்லையே? மக்களின் ரசனை மேம்படத் தீனி கிடைத்தால் சரி.

'புதுமை விரும்பிகளான மக்களுக்கு புதிய கதையம்சத்துடன் உலாவரும் புதியவர்கள் -இயக்குனர்களின் நாயக அரிதாரம் என்கிற நடிப்புத் தொழில் நிலையானதா? அல்லது நிலையற்றதா?' என்பதை தொடர்ந்து அவர்களின் முயற்சியும், நல்ல கதையம்சங்களின் தேர்வுமே தீர்மானிக்கும். அவர்களுக்கான காலம் கனிந்துள்ளது மகிழ்ச்சிக்குரியது. ஏனெனில், தமிழ் சினிமா வரலாற்றில் காலம் கனியும் முன்பே இயக்குனர்களான கே. சுப்பிரமணியம், ராஜா சாண்டோ, பாரதிராஜா, ஏன் பத்திரிகையாளரான ந. ராமரத்னம் உட்பட நடிகர்களாக -நாயகர்களாக உலாவந்து மின்மினி பூச்சி போல் மறைந்த வரலாறு நமக்கு உண்டு.



எது எப்படியோ புதியவர்கள் -இயக்குனர்கள் நாயக அரிதாரம் கொள்வதால் குறைந்த பட்ஜெட்டில் லாபம் அதிகரிக்கும். இழப்பாக இருப்பினும் அது குறைந்த அளவே இருக்கும். இருப்பினும் ஹீரோக்களின் பின்னால் அலைந்து தவம் கிடப்பதும், ஹீரோக்களின் கால்ஷீட்டிற்காகக் காத்திருப்பதும் தேவையில்லாமல் போவதென்பதும் நிதர்சனமான உண்மை. படத்திலும் குறைந்த பட்சம் விஷயமிருக்கும். படம் பார்க்க வரும் மக்களுக்கும் நேரம், பணம் விரயமிருக்காது. இதனைப் பெருத்த கரவொலி, நாற்காலி உடைப்பின்றி, காதுகிழியும் விசில் சப்தமின்றி, ஆராவாரமின்றி, மென்புன்னகையுடன் மக்கள் வரவேற்பதைக் கண்டு தொழில் ரீதியான நடிகர்கள் சற்று திணறத்தான் தொடங்கியிருக்கிறார்கள் என்பதும் உண்மை.



இதற்காக, தொழில் ரீதியான, மேற்சொன்ன முதல்நிலை, இரண்டாம் நிலை நடிகர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. அவர்களுக்கான கதைகள் (Hero Worship), அதைப் படைப்பதற்கான இயக்குனர்கள் மறுபுறம் இருக்கத்தான் செய்கிறார்கள். அதன் நிலைகளில் பெரிய அளவில் அதிர்ச்சி தரும் மாற்றங்கள் ஒன்றும் நிகழ்ந்து விடவில்லைதான். ஆனால் தற்போது மாறியுள்ள சூழல் -போட்டிகளில் கடுமையான முயற்சி, புதுமை முயற்சி, நடிப்பாற்றலில் பரிணாமம் (கமலைப் போன்று) அத்துடன் அவர்களுக்கான இத்தியாதி விஷயங்களுடன் நல்ல கதைத் தேர்வும் தேவை (பழைய ஃபார்முலா கதையல்ல) என்ற நிலையை காலம் உருவாக்கியிருப்பதை அவர்கள் கவனிக்கத் தவறக்கூடாது. இது அவர்களுக்காக, அவர்களை நம்பி வரும் ரசிகர்களுக்காக நிச்சயம் தேவை. இவை தமிழ் சினிமாவை, தமிழ் சமூகத்தை அடுத்த கட்டத்திற்குக் கொண்டுச் செல்ல உதவும் என்பதில் சற்றும் மிகையில்லை.





●